காலநடை பராமரிப்பு, பால்வளம்,
மீன்வளம் மற்றும் மீனவர் நலத்துறை

# பால்வளம்

மானியக் கோரிக்கை எண். 8

அறிவிப்புகள்
2023-2024

## சா.மு. நாசர்

பால்வளத்துறை அமைச்சர்

## 1. “கலைஞர் சங்க பணியாளர்கள் நல நிதி” உருவாக்கப்பட்டு தொடக்க பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவு சங்க பணியாளர்களின் நலன் பேணப்படும்.

பால் கூட்டுறவு சங்கங்களில் பணியாற்றும் 24,000 க்கும் மேற்பட்ட பணியாளர்களின் நீண்ட கால கோரிக்கையினை நிறைவேற்றும் வகையிலும், அவர்களுக்கு பல்வேறு நல திட்டங்கள் செயல்படுத்த ஏதுவாகவும் **“கலைஞர் சங்க பணியாளர்கள் நல நிதி”** (Kalaignar Society Employees Welfare Fund) சங்க பணியாளர்கள், சங்கம் மற்றும் மாவட்ட கூட்டுறவு பால் உற்பத்தியாளர்கள் ஒன்றியத்தின் பங்களிப்புடன் உருவாக்கப்படும்.

சங்க பணியாளர் விபத்து காரணமாக இறக்க நேரிட்டால் ரூபாய் 5 இலட்சம் இழப்பீடு வழங்கப்படும். மேலும் அதிகபட்சம் இரண்டு

குழந்தைகளுக்கு தலா ரூபாய் 25 ஆயிரம் உயர்கல்வி உதவித்தொகை மற்றும் திருமணத்திற்கு தலா ரூபாய் 30 ஆயிரம் இந்நிதியிலிருந்து வழங்கப்படும்.

2. தமிழ்நாட்டில் பால் உற்பத்தியை அதிகரிக்க பால் உற்பத்தியாளர்களுக்கு வங்கி கடன் மூலம் 2 இலட்சம் புதிய கறவை மாடுகள் வாங்க நபார்டு வங்கியின் கிளை நிறுவனத்தின் (NABSanrakshan) கடன் உத்திரவாத திட்ட உதவியுடன் “ஆவின் பால்பெருக்கு திட்டம்” செயல்படுத்தப்படும்.

தமிழ்நாட்டில் பால் உற்பத்தியை அதிகரிக்க ஏதுவாக பால் உற்பத்தியாளர்களுக்கு வங்கி மூலம் 2 இலட்சம் புதிய கறவை மாடுகள் கொள்முதல் செய்ய நபார்டு வங்கியின் கிளை நிறுவனத்தின் (NABSanrakshan) கடன் உத்திரவாதத் திட்டம் மூலம் “ஆவின் பால்பெருக்கு திட்டம்” செயல்படுத்தப்படும்.

பால் உற்பத்தியாளர்கள், தொடக்க பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவு சங்கம் மற்றும் வங்கி இடையே முத்தரப்பு ஒப்பந்தம் ஏற்படுத்தப்பட்டு இத்திட்டம் சிறப்பாக செயல்படுத்தப்படும்.

3. ஆவின் இணைய பால் பண்ணைகளில் பால் பாக்கெட்டுகள் தயாரித்து கையாளும் பணி ரூபாய் 30 கோடி செலவில் தானியங்கி இயந்திரம் நிறுவுவதன் மூலம் நவீனப்படுத்தப்படும்.

தற்போது மாதவரம், அம்பத்தூர், சோழிங்கநல்லூர் பால் பண்ணைகளின் மூலம் சென்னை பெருநகர நுகர்வோருக்கு பால் பாக்கெட்டுகள் தயாரிக்கப்பட்டு விநியோகம் செய்யப்பட்டு வருகிறது. இந்த பால் பண்ணைகளில் தானியங்கி இயந்திரங்கள் மூலம் பால் பாக்கெட்டுகள் உற்பத்தி செய்யப்பட்டு கையாளப்படும் போது குறித்த நேரத்தில் கால விரயமின்றி பால் பாக்கெட்டுகள் விநியோகிக்கப்படுவது உறுதி செய்யப்படும். மேலும், இதன் மூலம் பால் பண்ணைகளின் உற்பத்தி திறன் அதிகரித்து செலவினங்கள் குறைக்கப்படும்.

**4. கடலூர் மாவட்டம், திட்டக்குடியில் புதிய கால்நடை தீவன ஆலை ரூபாய் 25 கோடி மதிப்பீட்டில் நிறுவப்படும்.**

பால் உற்பத்தியாளர்களின் கறவை மாடுகளின் கலப்புத் தீவன தேவையை பூர்த்தி செய்யும் வண்ணம் கடலூர் மாவட்டம் திட்டக்குடியில் நாளொன்றுக்கு 200 மெட்ரிக் டன் உற்பத்தி திறன் கொண்ட புதிய கால்நடை தீவன ஆலை நபார்டு வங்கியின் நிதி உதவியுடன் (RIDF) ரூபாய் 25 கோடி மதிப்பீட்டில் நிறுவப்படும்.

ம. புடையூர் கிராமத்தில் 10 ஏக்கர் நிலப்பரப்பில் அமையவுள்ள இந்த தீவன தொழிற்சாலையால் இப்பகுதியைச் சார்ந்த மக்களுக்கு வேலை வாய்ப்பு பெருகுவதுடன் பால் உற்பத்தியும் அதிகரிக்கும்.

## 5. எருமை வளர்ப்பை ஊக்குவிக்க "எருமை கன்று வளர்ப்பு திட்டம்" நடைமுறைப்படுத்தப்படும்.

பால் உற்பத்தியில் எருமை மாடுகளின் பங்களிப்பு முக்கியமானது, எருமை மாடு வளர்ப்பை ஊக்குவிக்கும் வகையில் எருமைக் கன்று வளர்ப்பில் ஆர்வமுள்ள பால் உற்பத்தியாளர்கள் தேர்வு செய்யப்பட்டு எருமை கன்றுகள் வாங்கவும், அவர்களின் எருமைக் கன்றுகளுக்கு விலையில்லா கலப்புத் தீவனம், குடல்புழு நீக்க மருந்துகள் மற்றும் தடுப்பூசிகள் வழங்கப்பட்டு கன்று ஈனும் காலம் வரை தொடர்ந்து கண்காணிக்கப்படும். "எருமை கன்று வளர்ப்பு திட்டம்" மூலம் எருமை பால் உற்பத்தி அதிகரித்து பால் உற்பத்தியாளர்களுக்கு கூடுதல் வருவாய் பெறுவதன் மூலம் அவர்களின் பொருளாதாரம் மேம்படும்.

## 6. பால் உற்பத்தியாளர்களுக்கு தாங்கள் வழங்கும் பாலின் தரத்திற்கேற்ப உற்பத்தியுடன் கூடிய ஊக்கத்தொகை வழங்கப்படும்.

தரமான பாலை வழங்கும் சங்கத்தின் பால் உற்பத்தியாளர்களை ஊக்கப்படுத்தும் வகையில் அவர்கள் வழங்கும் தரமான பாலிற்கு (கொழுப்பு சத்து 4.3% மற்றும் இதர சத்து 8.2%) லிட்டர் ஒன்றுக்கு ரூபாய் ஒன்று கூடுதலாக ஊக்கத்தொகை வழங்கப்படும்.

இத்தொகை மாதம் ஒருமுறை கணக்கிடப்பட்டு உற்பத்தியாளர்களின் வங்கி கணக்கில் செலுத்தப்படும். இதன் மூலம் சங்கத்தின் அனைத்து உறுப்பினர்களும் தரமான பாலை ஊற்றுவது, சங்க அளவில் பால் தர பரிசோதனை செய்வது, உற்பத்தியாளர்களுக்கு பால் அளவு மற்றும் தரத்திற்கான ஒப்புகை சீட்டு (Milk Testing and Spot Acknowledgement) வழங்குவது உறுதி செய்யப்படும்.

**7. தொடக்க பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவு சங்கங்கள் பதிவு செய்தல், கள ஆய்வு பணிகள் மேற்கொள்ளுதல் மற்றும் பேரறிஞர் அண்ணா கூட்டுறவு பால் உற்பத்தியாளர்கள் நலநிதி பணிகள் கணினிமயமாக்கப்படும்.**

தொடக்க பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவு சங்கங்கள் பதிவு செய்ய விண்ணப்பம் பெறுதல், விண்ணப்பங்களை பரிசீலினை செய்தல் மற்றும் பதிவு செய்தல் ஆகிய பணிகளோடு, சங்கத்தின் பல்வேறு கட்டங்களில் மேற்கொள்ளப்படும் கள ஆய்வுகள் மற்றும் பேரறிஞர் அண்ணா கூட்டுறவு பால் உற்பத்தியாளர்கள் நலநிதி திட்ட பணிகள் ஆகியவை தேசிய கூட்டுறவு பால் பண்ணைகளின் இணையத்தின் (National Cooperative Dairy Federation of India - NCDFI) நிதி உதவியுடன் கணினிமயமாக்கப்படும்.

**8. ஒரு இலட்சம் பால் உற்பத்தியாளர்கள், சங்க பணியாளர்கள் மற்றும் மாவட்ட ஒன்றிய பணியாளர்களுக்கு திறன் மேம்பாட்டு பயிற்சி வழங்கப்படும்.**

மாவட்ட கூட்டுறவு பால் உற்பத்தியாளர்கள் ஒன்றிய பணியாளர்கள், பால் உற்பத்தியாளர்கள் மற்றும் சங்க பணியாளர்கள் அடங்கிய 1 இலட்சம் நபர்களுக்கு, தேசிய பால் பண்ணை மேம்பாட்டு திட்ட நிதி ரூபாய் 4.52 கோடி மதிப்பில் மாதவரம் திறன் மேம்பாட்டு பயிற்சி மையம், சேலம் மற்றும் மதுரை மாவட்ட ஒன்றிய பயிற்சி மையங்கள் மூலம் திறன் மேம்பாட்டு பயிற்சிகள் அளிக்கப்படும்.

இதன் மூலம் பால் பண்ணை தொழிலாளர்கள் நவீன தொழில் நுட்பங்களை அறிந்து கொள்வதுடன், உற்பத்தியாளர்கள் மற்றும் பணியாளர்கள் திறன் மேம்படும்.

## 9. புதிய தொழில் நுட்பங்களை காட்சிப்படுத்தும் வண்ணம் "தேசிய பால் பண்ணை வர்த்தக கண்காட்சி (National Dairy Trade Expo)" நடத்தப்படும்.

பால் பண்ணை துறையில் ஏற்பட்டுள்ள புதிய தொழில்நுட்ப வளர்ச்சியை காட்சிப்படுத்தும் வகையில் தேசிய அளவிலான பால் பண்ணை வர்த்தக கண்காட்சி தமிழ்நாடு கூட்டுறவு பால் உற்பத்தியாளர்கள் இணையம் மூலம் நடத்தப்படும். பால் பண்ணையின் நவீன தொழில்நுட்பங்கள், பால் பண்ணையில் உள்ள வேலை வாய்ப்புகள், கருத்தரங்க பட்டறைகள், கண்காட்சி மற்றும் விற்பனை அரங்குகள் காட்சிப்படுத்தப்படும்.

மாவட்ட ஒன்றியங்கள், மற்ற மாநில பால் கூட்டுறவு நிறுவனங்கள் மற்றும் தனியார் பால் பண்ணை நிறுவனங்கள் இக்கண்காட்சியில் கலந்து கொண்டு பயனடைவார்கள்.

## 10. ஆவின் நுகர்வோர்களுக்கு மாதாந்திர பால் அட்டை (e-Milk Card) விற்பனை மற்றும் புதுப்பிக்கும் பணிகள் கணினிமயமாக்கப்படும்.

ஆவின் நுகர்வோர் வசதிக்காக மாதாந்திர பால் அட்டை பெறுதல் மற்றும் புதுப்பிக்கும் பணிகள் முழுவதும் கணினிமயமாக்கப்பட்டு மின்னணு பால் அட்டைகள் (e-Milk Card) அறிமுகப்படுத்தப்படும். இதன் மூலம் நுகர்வோர்கள் தங்கள் இருப்பிடத்தில் இருந்தபடியே மாதாந்திர பால் அட்டைகளை மின்னணு முறையில் பெற்றுக் கொள்ளலாம். இதன் மூலம் பால் அட்டை அச்சடித்தல், விநியோகித்தல் போன்ற செலவினங்கள் குறைக்கப்படுவதோடு நுகர்வோர்களின் பயணம் மற்றும் நேரம் விரயமாகாமல் எளிதாக பால் அட்டை பெறுவது உறுதி செய்யப்படும்.

## 11. "ஆவின் ஓய்வூதியர் குடும்ப பாதுகாப்பு நிதி" உருவாக்கப்படும்.

தமிழ்நாடு கூட்டுறவு பால் உற்பத்தியாளர்கள் இணையம் மற்றும் மாவட்ட கூட்டுறவு பால் உற்பத்தியாளர்கள் ஒன்றியங்களில் கருணை ஓய்வூதியத்திலிருந்து பிடித்தம் செய்து தனி நிதி (Corpus Fund) உருவாக்கி, அதன் மூலம் கருணை ஓய்வூதியர்கள் இறந்தால், அன்னாரது குடும்பத்திற்கு நிதி உதவி வழங்க "ஆவின் ஓய்வூதிய குடும்ப பாதுகாப்புநிதி" உருவாக்கப்படும்.

12. பால் உற்பத்தியாளர்களின் 5 இலட்சம் கறவைகளுக்கு 50% மானியத்தில் தேசிய கால்நடை காப்பீடு திட்டத்தின் மூலம் காப்பீடு செய்யப்படும்.

கிராமப்புறங்களில் உள்ள பால் உற்பத்தியாளர்களின் கறவை மாடுகள் திடீரென்று இறக்கும்போது, அக்கறவை மாடுகள் மூலம் பால் உற்பத்தியாளர்களுக்கு கிடைக்கின்ற தொடர் வருமானம் நின்று விடுவதால், பால் உற்பத்தியாளர்களுடைய வாழ்வாதாரம் பாதிப்படைகின்றது.

இப்பொருளாதார இழப்பினை ஈடு செய்யும் பொருட்டு நடப்பாண்டில் 5 இலட்சம் கறவைகளுக்கு 50 சதவீத மானியத்தில் காப்பீடு செய்யப்படும்.

**13. "தமிழ்நாடு பால் உற்பத்தி மேலாண்மை கொள்கை" உருவாக்கப்படும். மேலும் "தமிழ்நாடு கூட்டுறவு பால் உற்பத்தி ஒழுங்குமுறை மற்றும் பால் கூட்டுறவு சட்டம்" அறிமுகப்படுத்த நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.**

தமிழ்நாட்டில் பால் உற்பத்தியை மேம்படுத்துவதற்கென "தமிழ்நாடு பால் உற்பத்தி மேலாண்மை கொள்கை" உருவாக்கப்படும். தமிழ்நாட்டில் பால் கொள்முதலை வரைமுறைப்படுத்தவும், உற்பத்தியாளர்களின் நலனை பாதுகாக்கவும், வளர்ந்து வரும் தரக்கட்டுப்பாடு தொழில்நுட்பங்களை சரியான முறையில் ஒழுங்குபடுத்தவும், பால் கூட்டுறவு சங்கங்கள் நலிவடையாமல் இலாபகரமாக இயங்குவதை உறுதி செய்யும் வகையிலும் "பால் உற்பத்தி ஒழுங்குமுறை மற்றும் பால் கூட்டுறவு சட்டம்" இயற்ற நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

14. சுற்றுச்சூழலை பாதுகாக்கும் விதமாக சூரிய சக்தி மற்றும் காற்றாலை போன்ற புதுப்பிக்கத்தக்க ஆற்றல் வளங்கள் மூலமாக மின்சாரம் உற்பத்தி செய்யப்பட்டு மாற்று மின்சாரமாக பயன்படுத்தப்படும்.

இணையம் மற்றும் மாவட்ட ஒன்றியங்களில் உள்ள காலி இடங்கள் மற்றும் கட்டிடத்தின் மேற்கூரையில் சூரிய சக்தி மின் உற்பத்தி தகடுகள் பொருத்தப்பட்டு உற்பத்தியாகும் மின்சாரம் அலுவலகங்களில் பயன்படுத்தப்படும். மேலும் இதர அரசு மற்றும் தனியார் துறை மூலம் தயாரிக்கப்படும் சூரிய சக்தி மற்றும் காற்றாலை சக்தி மின்சாரம் இணையம் மற்றும் மாவட்ட ஒன்றியங்களில் உள்ள பால் பண்ணைகளுக்கு பயன்படுத்தபடும். இதன் மூலம் சுற்றுசூழல் பாதுகாக்கப்படுவதோடு பசுமை இல்ல வாயுவான CO2 குறைக்கப்பட்டு புவி வெப்பமயமாதலை தடுக்க வழிவகை செய்யப்படும்.

## 15. புதிய திட்டங்களை செயல்படுத்த ஏதுவாக ஆவின் நிறுவனம் மூலம் புதிய பிரிவு 8 நிறுவனம் உருவாக்கப்படும்.

ஆவின் இணையம், மாவட்ட ஒன்றியங்கள் மற்றும் கூட்டுறவு சங்கங்களை, வளர்ந்து வரும் தொழில்நுட்ப வளர்ச்சிக்கேற்ப மேம்படுத்துவது, பல்வேறு நிறுவனங்களிடமிருந்து நிதி பெறுவது, துறை சார்ந்த பல்வேறு பணிகளை மேற்கொள்வது, தொழில்நுட்ப ஆலோசனை வழங்குவது போன்ற பணிகளை மேற்கொள்ள, மற்ற நிறுவனங்களின் பங்களிப்புடன் புதிய பிரிவு 8 நிறுவனம் உருவாக்கப்படும்.

## 16. புதிய சாக்லேட் உற்பத்தி அலகு அம்பத்தூர் பால் பண்ணை வளாகத்தில் ரூபாய் 1.5 கோடி மதிப்பீட்டில் நிறுவப்படும்.

நுகர்வோர்களிடையே கோகோ பீன்ஸ் மூலப்பொருளுடன் பால் பவுடர் சேர்ந்த சாக்லேட்களுக்கு நல்ல வரவேற்பு உள்ளது. இதனைக் கருத்தில் கொண்டு ரூபாய் 1.5 கோடி மதிப்பீட்டில் சாக்லேட் உற்பத்தி அலகு, இந்திய அரசின் உணவு பதப்படுத்தும் துறையின் 35 சதவீத மானியத்தில் தமிழ்நாடு கூட்டுறவு பால் உற்பத்தியாளர்கள் இணையம் வழியாக அம்பத்தூர் பால் பண்ணை வளாகத்தில் நிறுவப்படும். இதன் மூலம் மதிப்பு கூட்டப்பட்ட பால் பொருட்கள் விற்பனை அதிகரிக்கும்.

17. புதியதாக உருவாக்கப்பட்ட கள்ளக்குறிச்சி ஒன்றியத்தில் நாளொன்றுக்கு 25,000 லிட்டர் பால் கையாளும் திறன் கொண்ட பால் பாக்கெட் உற்பத்தி செய்யும் வசதி ரூபாய் 2 கோடி மதிப்பீட்டில் நிறுவப்படும்.

தற்சமயம் கள்ளக்குறிச்சி மாவட்ட நுகர்வோர்களின் தினசரி தேவையினை பூர்த்தி செய்ய பால் பாக்கெட்டுகள் விழுப்புரம் ஒன்றியத்திலிருந்து கொள்முதல் செய்யப்பட்டு விற்பனை செய்யப்பட்டு வருகிறது.

புதியதாக உருவாக்கப்பட்ட கள்ளக்குறிச்சி மாவட்ட ஒன்றியத்தின் தேவையை பூர்த்தி செய்யும் விதமாக நாளொன்றுக்கு 25,000 லிட்டர் பால் கையாளும் திறன் கொண்ட பால் பாக்கெட் உற்பத்தி செய்யும் வசதி ரூபாய் 2 கோடி மதிப்பீட்டில் நிறுவப்படும்.

18. இராணிப்பேட்டை மாவட்டம் கொடக்கல் பால் குளிருட்டும் நிலைய வளாகத்தில் 25,000 லிட்டர் பால் கையாளும் திறன் கொண்ட பால் பாக்கெட் உற்பத்தி செய்யும் வசதி ரூபாய் 2 கோடி மதிப்பீட்டில் நிறுவப்படும்.

தற்சமயம் இராணிப்பேட்டை மாவட்ட நுகர்வோர்களின் தினசரி தேவையினை பூர்த்தி செய்ய பால் பாக்கெட்டுகள் வேலூர் பால் பண்ணையில் இருந்து கொள்முதல் செய்யப்பட்டு விற்பனை செய்யப்பட்டு வருகிறது.

இராணிப்பேட்டை மாவட்ட நுகர்வோர் தேவையை பூர்த்தி செய்யும் வகையில் கொடக்கல் பால் குளிருட்டும் நிலைய வளாகத்தில் நாளொன்றுக்கு 25,000 லிட்டர் பால் கையாளும் திறன் கொண்ட பால் பாக்கெட் உற்பத்தி செய்யும் வசதி ரூபாய் 2 கோடி மதிப்பீட்டில் நிறுவப்படும்.

## 19. சூரிய சக்தி மூலம் பால் கேன்களை குளிர்விக்கும் இயந்திரங்கள் பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவு சங்க அளவில் நிறுவப்படும்.

மேற்குத் தொடர்ச்சிமலைப் பகுதிகளில் உள்ள சங்கங்களில் கொள்முதல் செய்யப்படும் பாலினை அருகிலுள்ள பால் குளிர்விப்பு மையங்களுக்கு எடுத்துச்செல்ல நீண்ட நேரம் ஆகிறது. பாலின் காப்பு நேரம் மற்றும் தரம் அதிகரிக்க பாலை உடனடியாக குளிர்விக்கத் தேவையான சூரிய சக்தி மூலம் இயங்கும் பால் கேன்கள் குளிர்விக்கும் இயந்திரங்கள் பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவு சங்க அளவில் நிறுவப்படும்.

## 20. ஈரோடு சத்தியமங்கலத்தில் பசுந்தீவன குச்சிகள் (Green Fodder Pellets) தயாரிக்கும் ஆலை ரூபாய் 6.75 கோடி மதிப்பீட்டில் நிறுவப்படும்.

பசுந்தீவனம் அதிக அளவில் உற்பத்தியாகும் காலத்தில் அவற்றை பதப்படுத்தி வைக்க வேண்டியது அவசியம். பற்றாக்குறை காலங்களில் கறவை மாடுகளின் பசுந்தீவன தேவையை பூர்த்தி செய்ய புதிய தொழில்நுட்பம் மூலம் பசுந்தீவன குச்சி (Green Fodder Pellet) தயாரிக்கும் ஆலை சிறப்பு பகுதி மேம்பாட்டுத் திட்டம் (SADP) நிதியின் மூலம் ரூபாய் 6.75 கோடி மதிப்பீட்டில் நிறுவப்படும். இதன் மூலம் உபரியாக உற்பத்தியாகும் காலத்தில் கிடைக்கும் பசுந்தீவனம் பதப்படுத்தப்பட்டு பாதுகாத்து தேவைப்படும் காலங்களில் பயன்படுத்த இயலும்.

## 21. தஞ்சாவூர், சேலம் மற்றும் ஈரோடு மாவட்டங்களில் பசுந்தீவன புல் விதைகள் உற்பத்தி திட்டம் செயல்படுத்தப்படும்.

ஆவின் பால் உற்பத்தியாளர்களுக்கு பசுந்தீவன உற்பத்திக்காக தரமான விதைகள் கிடைப்பதை உறுதிசெய்ய முதல் கட்டமாக தஞ்சாவூர், சேலம் மற்றும் ஈரோடு ஒன்றியங்களிலும், இரண்டாவது கட்டமாக மற்ற ஒன்றியங்களிலும் தர முத்திரையிடப்பட்ட விதைகள்/ சான்றளிக்கப்பட்ட விதைகள் உற்பத்தி செய்யப்படும்.

இணையம் மற்றும் ஒன்றிய நிதி ரூபாய் 25 இலட்சம் செலவில் பசுந்தீவன விதை உற்பத்தி செய்து பால் உற்பத்தியாளர்களுக்கு வழங்கப்படும்.

**22\. நீலகிரியில் உள்ள ஆவின் உறைவிந்து உற்பத்தி நிலையத்தில் உட்கட்டமைப்பு வசதிகள் ரூபாய் 5.46 கோடி மதிப்பீட்டில் மேம்படுத்தப்படும்.**

பால் உற்பத்தியாளர்களின் கறவை மாடுகளின் இனவிருத்தி தேவைக்காக நீலகிரி ஆவின் உறைவிந்து நிலையத்தில் உற்பத்தி செய்யப்படும் உறைவிந்து குச்சிகள் பயன்படுத்தப்படுகின்றன.

கூடுதல் தேவையினை பூர்த்தி செய்ய இந்நிலையத்தின் உறைவிந்து குச்சிகளின் உற்பத்தி திறன் அதிகரிக்கும் நோக்கில் இராஷ்டிரிய கோகுல் மிஷன் (RGM) நிதி ரூபாய் 5.46 கோடி மதிப்பீட்டில் உட்கட்டமைப்பு வசதிகள் மேம்படுத்தப்படும்.

## 23. நீலகிரி மாவட்ட ஒன்றிய பால் பண்ணை புனரமைப்பு பணிகள் ரூபாய் 40 இலட்சம் மதிப்பீட்டில் மேற்கொள்ளப்படும்.

மலை மாவட்டமான நீலகிரியில் உள்ள பால் உற்பத்தி மற்றும் விற்பனை கட்டமைப்பு வசதி மேம்படுத்துவதன் அவசியத்தை கருதி, சிறப்பு பகுதி வளர்ச்சி திட்ட நிதியிலிருந்து (SADP) நீலகிரி மாவட்ட ஒன்றியத்தின் நிர்வாக அலுவலகம் மற்றும் பால் பண்ணை கட்டிடங்கள் ரூபாய் 22 இலட்சம் மதிப்பீட்டில் புனரமைக்கப்படும். மேலும், ரூபாய் 18 இலட்சம் மதிப்பீட்டில் ஐஸ்கிரீம் விற்பனையை அதிகரிக்க குளிர்சாதன வாகனம் கொள்முதல் செய்து தரப்படும்.

**24. தூய பால் உற்பத்தியை உறுதி செய்ய தேசிய பால்வள மேம்பாட்டு திட்ட நிதி மூலம் ரூபாய் 8.75 கோடி மதிப்பீட்டில் கிராமப்புற ஆய்வகங்கள் மேம்படுத்தப்படும்.**

கிராமப்புறத்தில் உற்பத்தி செய்யப்படுகின்ற பாலின் தரத்தை உடனுக்குடன் ஆய்வு செய்து தூய பால் உற்பத்தியை உறுதி செய்ய தேசிய பால் வள மேம்பாட்டுத் திட்டத்தின் மூலம் ரூபாய் 8.75 கோடி மதிப்பீட்டில் தொடக்க பால் கூட்டுறவு சங்கங்கள் மற்றும் மாவட்ட கூட்டுறவு ஒன்றியங்கள் உள்ளிட்ட கிராமப்புற ஆய்வகங்கள் மேம்படுத்தப்படும். இத்திட்டத்தினால் பால் உற்பத்தியாளர்களுக்கு பாலின் தரத்திற்கேற்ற விலை கிடைக்கவும், பால் உற்பத்தியாளர்களின் வாழ்வாதாரம் மேம்படவும், நுகர்வோர்களுக்கு தரமான பால் மற்றும் பால் பொருட்கள் கிடைக்கவும் வழிவகை செய்யப்படும்.

**25. தொடக்க பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவு சங்கங்களுக்கு புதிய அலுவலக கட்டடங்கள் ரூபாய் 5 கோடி மதிப்பீட்டிலும் மற்றும் 100 சங்க கட்டிட புனரமைப்பு பணிகளும் மேற்கொள்ளப்படும்.**

தொடக்க பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவு சங்கங்களுக்கு மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதி திட்ட நிதி உதவியுடன், 50 தொடக்க பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவு சங்கங்களுக்கு மொத்த ரூபாய் 5 கோடி மதிப்பீட்டில் புதிய அலுவலக கட்டடங்கள் கட்டித் தரப்படும்.

மேலும், பால் உற்பத்தியாளர்கள் மற்றும் சங்க பணியாளர்கள் பயன்பெறும் வகையில் 100 சங்க கட்டிடங்களுக்கு சங்க கட்டிட நிதியிலிருந்து புனரமைப்பு பணிகள் மேற்கொள்ளப்படும்.

**26. தரமான பால் உற்பத்தியை ஊக்குவிக்கும் பொருட்டு, சிறந்த பால் உற்பத்தியாளர்கள், சங்க செயலாளர்கள் மற்றும் தொகுப்பு பால் குளிர்விப்பு மைய செயலாளர்களுக்கு ரொக்க பரிசு வழங்கப்படும்.**

சங்கங்களில் தரமான பால் உற்பத்தியை ஊக்குவிக்கும் பொருட்டு, மாவட்ட ஒன்றியங்கள் தோறும் சிறப்பாக செயல்படுகின்ற சிறந்த பால் உற்பத்தியாளர்கள், சங்க செயலாளர்கள் மற்றும் தொகுப்பு பால் குளிர்விப்பு மைய செயலாளர்கள் தேர்வு செய்யப்பட்டு, அவர்களுக்கு ரூபாய் 2 கோடி அளவில் ரொக்க பரிசு, இணையம் மற்றும் மாவட்ட கூட்டுறவு பால் உற்பத்தியாளர்கள் ஒன்றிய நிதியிலிருந்து வழங்கப்படும்.

## 27. நுகர்வோர்களின் தேவைக்கேற்ப புதிய பால் வகைகள் மற்றும் பால் பொருட்கள் அறிமுகப்படுத்தப்படும்.

பெருகிவரும் நுகர்வோர்களின் தேவையை கருத்தில் கொண்டு ஆவின் அவ்வப்போது புதிய பால் வகைகள் மற்றும் பால் பொருட்களை அறிமுகப்படுத்தி வரவேற்பை பெற்று வருகிறது. இவ்வாண்டும் புதிய பால் வகைகள் மற்றும் பால் பொருட்கள் ஆவின் நிறுவனத்தால் அறிமுகப்படுத்தப்படும்.

## 28. ஆவின் பால் மற்றும் பால் பொருட்கள் விற்பனைக்கு இணைய வழி விற்பனை வசதி (Online sales) ஏற்படுத்தப்படும்.

நுகர்வோர்கள் தங்களுக்கு தேவையான பால் மற்றும் பால் பொருட்களை உடனுக்குடன் தங்களது இருப்பிடத்தில் இருந்தபடியே பெற்றுக்கொள்ளவும், ஆவின் விற்பனையை அதிகரிக்கும் நோக்கத்திலும், செயலி மற்றும் இணையதளம் உருவாக்கப்படும். இவ்வசதி சென்னை மற்றும் இதர மாநகரங்களில் முதற்கட்டமாக செயல்படுத்தப்படும். இணைய வழி விற்பனை வசதி, செயலி மூலமாகவும், இணையதளம் மூலமாகவும் ஏற்படுத்தப்படும்.

**29. காஞ்சிபுரத்தை தலைமையிடமாகக் கொண்டு புதியதாக “காஞ்சிபுரம் செங்கல்பட்டு மாவட்ட கூட்டுறவு பால் உற்பத்தியாளர்கள் ஒன்றியம்" உருவாக்கப்படும்.**

காஞ்சிபுரம்- திருவள்ளூர் மாவட்ட கூட்டுறவு பால் உற்பத்தியாளர்கள் ஒன்றியம், காஞ்சிபுரம், திருவள்ளூர் மற்றும் செங்கல்பட்டு மாவட்டங்களை விவகார எல்லையாக கொண்டு செயல்பட்டு வருகிறது.

காஞ்சிபுரம், செங்கல்பட்டு மாவட்ட விவகார எல்லைகளில் செயல்பட்டு வரும் தொடக்க பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவு சங்கங்களை உறுப்பினர்களாக கொண்டும் காஞ்சிபுரத்தை தலைமையிடமாகக் கொண்டும், புதியதாக மாவட்ட கூட்டுறவு பால் உற்பத்தியாளர்கள் ஒன்றியம் உருவாக்கப்படும்.

**30. திருவாரூரை தலைமையிடமாகக் கொண்டு புதியதாக "திருவாரூர், நாகப்பட்டினம் மற்றும் மயிலாடுதுறை மாவட்ட கூட்டுறவு பால் உற்பத்தியாளர்கள் ஒன்றியம்" உருவாக்கப்படும்.**

தஞ்சாவூர் மாவட்ட கூட்டுறவு பால் உற்பத்தியாளர்கள் ஒன்றியம், தஞ்சாவூர், திருவாரூர், நாகப்பட்டினம் மற்றும் மயிலாடுதுறை ஆகிய மாவட்டங்களை விவகார எல்லையாக கொண்டு செயல்பட்டு வருகிறது.

திருவாரூர், நாகப்பட்டினம் மற்றும் மயிலாடுதுறை மாவட்ட விவகார எல்லையில் செயல்பட்டு வரும் தொடக்க பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவு சங்கங்களை உறுப்பினர்களாக கொண்டும், திருவாரூரை தலைமையிடமாகக் கொண்டும் புதியதாக மாவட்ட கூட்டுறவு பால் உற்பத்தியாளர்கள் ஒன்றியம் உருவாக்கப்படும்.

31. மாவட்ட கூட்டுறவு ஒன்றியங்களில் 50 புதிய நவீன பாலகங்கள் ரூபாய் 2.5 கோடி மதிப்பீட்டிலும், சென்னை மாநகரில் 30 ஏவிளம் பாலகங்கள் புனரமைப்பு பணிகள் ரூபாய் 10 இலட்சம் மதிப்பீட்டிலும் மேற்கொள்ளப்படும்.

ஆவின் பால் மற்றும் பால் பொருட்கள் விற்பனையை அதிகரிக்கும் வகையில் தமிழ்நாடு முழுவதும் தலா ரூபாய் 5 லட்சம் செலவில் மொத்தம் ரூபாய் 2.5 கோடி மதிப்பீட்டில் 50 எண்ணிக்கையில் பாலகங்கள் அமைக்கப்படும். சென்னை மாநகரில் 30 பாலகங்கள் மொத்தம் ரூபாய் 1 0 இலட்சம் மதிப்பீட்டில் புதுப்பிக்கப்படும்.

## 32. பால்வளத்துறையில் உள்ள பால் கூட்டுறவுகளுக்கென "பால் கூட்டுறவு ஒன்றியம்" (Dairy Co-operative Union) அமைக்கப்படும்.

கூட்டுறவுத் துறையின் கீழ் கூட்டுறவு ஒன்றியம் அமைக்கப்பட்டு, இலாபத்தில் செயல்படும் கூட்டுறவு அமைப்புகள் தங்களது இலாபப் பிரிவினையில் ஒரு குறிப்பிட்ட பங்கை கூட்டுறவு கல்வி, பயிற்சி, கூட்டுறவு ஆராய்ச்சி மற்றும் வளர்ச்சி நிதி என ஒதுக்கீடு செய்கின்றன. இந்நிதியின் மூலம் கூட்டுறவு சங்க பணியாளர்களுக்கு பல்வேறு பயிற்சிகளும், கூட்டுறவு சங்கங்களை ஊக்கப்படுத்தும் விதமாக பல்வேறு உதவிகளும் செய்து வருவதைப்போன்று, பால்வளத்துறையில் உள்ள பால் கூட்டுறவு சங்கங்களுக்கென "பால் கூட்டுறவு ஒன்றியம்" (Dairy Co-operative Union) ஏற்படுத்தப்படும்.

**33. மகளிர் தொழில்முனைவோர்களுக்காக பல்வேறு திறன் மேம்பாட்டு பயிற்சிகள் வழங்க சேலம் மற்றும் திருநெல்வேலி மாவட்ட ஒன்றிய பயிற்சி நிலையங்களில் உட்கட்டமைப்பு வசதிகள் ரூபாய் 2.58 கோடி செலவில் மேம்படுத்தப்படும்.**

மகளிர் தொழில்முனைவோர்களை ஊக்குவிக்கும் பொருட்டு பல்வேறு திறன் மேம்பாட்டு பயிற்சிகளான தூய பால் உற்பத்தி, தீவன மேலாண்மை, செயற்கை முறை கருவூட்டல் ஆகிய பயிற்சிகளை வழங்குகின்ற சேலம் மற்றும் திருநெல்வேலி மாவட்ட ஒன்றிய பயிற்சி நிலையங்களின் உட்கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்தும் வகையில் மகளிருக்கு தங்கும் வசதியுடன் கூடிய விடுதிகள் ரூபாய் 2.58 கோடி செலவில் இராஷ்டிரிய கோகுல் மிஷன் (RGM) மூலம் கட்டித்தரப்படும்.

**34. நீண்டகால அடிப்படையில் ஆவின் நுகர்வோர்களின் எண்ணிக்கையினை விரிவுபடுத்தவும், பால் பொருட்களின் விற்பனையினை அதிகரிக்கச் செய்யவும் நுகர்வோர் ஊக்குவிப்பு (Loyalty) திட்டங்கள் செயல்படுத்தப்படும்.**

ஆவின் பால் பொருட்களை தொடர்ந்து வாங்கும் நுகர்வோர்களுக்கு அவர்கள் வாங்குகின்ற மதிப்பிற்கு ஏற்றவாறு வெகுமதி புள்ளிகள் வழங்கப்பட்டு அப்புள்ளிகளுக்கு உரிய மதிப்பில் சலுகைகள் வழங்கும் வகையில் நுகர்வோர் ஊக்குவிப்பு திட்டம் செயல்படுத்தப்படும்.

மேலும், நுகர்வோர் தொடர்பு திட்ட முகாம்கள் நடத்தி, அதிகமான பால் மற்றும் பால் பொருட்கள் வாங்கிய நுகர்வோர்கள் குலுக்கல் முறையில் தேர்த்தெடுக்கப்பட்டு அவர்களுக்கு பரிசுகள் (Gift hampers) வழங்கப்படும்.

## 35. கறவை மாடு வளர்ப்பில் விழிப்புணர்வு ஏற்படுத்த கன்று பேரணிகள் நடத்தப்படும்.

கன்று பேரணிகள் நடத்துவதன் மூலம் பால் உற்பத்தியாளர்களிடையே அறிவியல் பூர்வமாக கன்று வளர்ப்பு குறித்த விழிப்புணர்வை ஏற்படுத்தலாம். நன்றாக பராமரிக்கின்ற கன்றுகளின் உரிமையாளர்களுக்கு பரிசுகள் வழங்கி ஊக்குவிக்கப்படும். அனைத்து கன்றுகளுக்கும் உடல் எடை அடிப்படையில் குடல்புழுநீக்க மருந்து அளிக்கப்படும். மாவட்ட ஒன்றியங்களில் 50 எண்ணிக்கையில் கன்றுகள் பேரணிகள் இராஷ்டிரிய கோகுல் மிஷன் ( R G M ) திட்டத்தின் மூலம் ரூபாய் 10 இலட்சம் செலவில் நடத்தப்படும்.

**36. கறவைகளின் இனப்பெருக்க திறனை மேம்படுத்த சினை முட்டை ஒருங்கிணைப்பு (ovulation synchronization) தொழில்நுட்பம் ரூபாய் 7 கோடி மதிப்பீட்டில் செயல்படுத்தப்படும்.**

20,000 பசுக்கள் மற்றும் எருமையினங்களை, சினை முட்டை வெளியேறும் நேரத்தினை ஒருங்கிணைக்கும் தொழில்நுட்பத்திற்கு உட்படுத்தி பாலினம் பகுக்கப்பட்ட (Sex sorted semen) உறைவிந்து குச்சிகளை பயன்படுத்தி செயற்கைமுறை கருவூட்டல் செய்வதன் மூலம் கிடாரி கன்றுகள் அதிக எண்ணிக்கையில் பிறக்கும். நீண்டகால அடிப்படையில் பாலுற்பத்தி அதிகரிக்கும். இதன் மூலம் 20,000 பால் உற்பத்தியாளர்கள் பயனடைவர். இராஷ்டிரிய கோகுல் மிஷன் (RGM) மூலம் ரூபாய் 7 கோடி மதிப்பீட்டில் திட்டம் அமல்படுத்தப்படும்.

**37. நீலகிரி மாவட்டத்தில் பால் உற்பத்தியை அதிகரிக்க கால்நடை தீவனம் மற்றும் தாது உப்பு கலவை மானிய விலையில் வழங்கப்படும்.**

நீலகிரி மாவட்டத்தில் மேய்ச்சல் நிலப்பரப்பு குறைந்ததால் கறவை மாடுகளின் தீவனத் தேவைகளைப் பூர்த்தி செய்ய கால்நடைத் தீவனம் மற்றும் தாதுக் கலவை அளிப்பது அத்தியாவசியமாகிறது. சிறப்பு பகுதி மேம்பாட்டு திட்டத்தின் (SADP) நிதி மூலம் ரூபாய் 2 கோடி மதிப்பீட்டில் நீலகிரி மாவட்டத்தில் உள்ள பால் உற்பத்தியாளர்களுக்கு ஊக்கமளிக்கும் வகையில் பால் உற்பத்தி பெருக்கும் வகையிலும் கால்நடை தீவனம் மற்றும் தாது உப்புக் கலவை மானிய விலையில் வழங்கப்படும்.

## 38. கறவை இனங்களில் மடி நோய் தடுப்பு மற்றும் புற ஒட்டுண்ணி தடுப்பு திட்டம் அறிமுகப்படுத்தப்படும்.

பால் உற்பத்தியாளர்களின் கறவை மாடுகளை மடிநோய் மற்றும் புற ஒட்டுண்ணிகள் மூலம் தோல் கழலை நோய் மற்றும் இரத்த சோகை நோய்கள் ஏற்படுவதைத் தடுக்கும் வகையில் மடிநோய் மற்றும் புற ஒட்டுண்ணி தடுப்பு திட்டம் செயல்படுத்தப்படும். இவ்விரு நோய்களைப் பற்றிய விழிப்புணர்வு மற்றும் தடுப்பு மருந்துகள் அளிக்கும் இத்திட்டத்தின் மூலம் பால் உற்பத்தி குறைவு தடுக்கப்பட்டு பால் உற்பத்தியாளர்கள் பயனடைவார்கள்.

## 39. கறவை மாடுகளின் பால் உற்பத்தி திறனை அதிகரிக்க நுண்ணூட்ட சத்துக்கலவை (Micro Nutrients) வழங்கப்படும்.

கறவை மாடுகளின் செரிமான சக்தியினை அதிகரிக்க அதன் பெருவயிற்றில் நுண்ணுயிரிகளின் எண்ணிக்கையினை உயர்த்த நுண்ணூட்டச்சத்துக்கலவை வழங்குவது அவசியமாகும். நுண்ணூட்டச் சத்துக்கலவையின் பயன்பாடு பற்றிய விழிப்புணர்வை பால் உற்பத்தியாளர்களிடம் ஏற்படுத்த 20,000 கறவை மாடுகளுக்கு ரூபாய் 60 இலட்சம் செலவில் நுண்ணூட்டச்சத்துக்கலவை வழங்கப்படும்.

**40. பால் உற்பத்தியாளர்கள் மற்றும் கூட்டுறவு சங்க பணியாளர்கள் இதர பால் கூட்டுறவு நிறுவனங்களுக்கு விழிப்புணர்வு பயணம் அழைத்துச் செல்லப்படுவர்.**

10,000 எண்ணிக்கையிலான பால் உற்பத்தியாளர்கள் மற்றும் சங்க பணியாளர்களை ஊக்குவிக்கும்பொருட்டு இராஷ்டிரிய கோகுல் மிஷன் (R G M) நிதியினை பயன்படுத்தி பிற பால் கூட்டுறவு நிறுவனங்களுக்கு (Exposure Visit) அழைத்துச் செல்லப்படுவர். பிற கூட்டுறவு நிறுவனங்களில் கடைபிடிக்கப்படும் சிறந்த பால்பண்ணை நடைமுறைகளை தெரிந்து கொள்ள இப்பயணம் பயனளிக்கும்.

## 41. பால் உற்பத்தியாளர்களின் கறவை மாடுகளின் மேம்பாட்டிற்காக “ ஒருங்கிணைந்த கால்நடை மேம்பாட்டு நிதி” உருவாக்கப்படும்.

சங்க அளவில் உள்ள உற்பத்தியாளர்களின் கால்நடை மேம்பாட்டு பணிகளான தடுப்பூசி, காப்பீடு, இனவிருத்தி, நோய் மேலாண்மை பணிகளை மேற்கொள்ளவும் மற்றும் உற்பத்தி காலம் கடந்த கறவை மாடுகளுக்கு மாற்று கறவைகள் வழங்குவதற்காக “ஒருங்கிணைந்த கால்நடை மேம்பாட்டு நிதி” உருவாக்கப்படும்.

தொடக்க பால் உற்பத்தியாளர்களின் கூட்டுறவு சங்கங்களில் ஒதுக்கீடு செய்யப்படும் கால்நடை மேம்பாட்டு நிதி ஒருங்கிணைக்கப்பட்டு உற்பத்தியாளர்களின் பொருளாதார மேம்பாட்டிற்காக செலவிடப்படும்.

**42. சூரிய சக்தி மூலம் தண்ணீரை சூடேற்றும் கருவி 277 எண்ணிக்கையில் தொகுப்பு பால் குளிர்விப்பு மையங்களில் ரூபாய் 2 கோடி மதிப்பீட்டில் நிறுவப்படும்.**

தொகுப்பு குளிர்விப்பு மையங்களில் பாலை சேமிக்கின்ற கலன், பால் கேன்கள், இதர உபகரணங்களை சூடான நீரில் (Sanitizer) இரசாயனம் மற்றும் சோப்பு தூளைக் கலந்து சுத்தப்படுத்தும்போது தூய்மை விகிதம் அதிகமாகிறது.

இதனால் தொகுப்பு பால் குளிர்விப்பு மைங்களில் கொள்முதல் செய்கின்ற ஆரம்ப பாலின் காப்பு நேரம் குறையாமல் பாதுகாக்கப்படுகிறது. மேலும் மின்நுகர்வு கணிசமாக குறைவதால் மாவட்ட ஒன்றியங்களின் மின் கட்டணம் செலுத்தும் தொகை சேமிக்கப்படும்.

## 43. பால் உற்பத்தி திறன் பதிவு திட்டம் (Field Performance Recording Programme) மேலும் 18 மாவட்ட ஒன்றியங்களுக்கு விரிவாக்கம் செய்யப்படும்.

தற்போது 9 மாவட்ட ஒன்றியங்களில் கறவை மாடுகளில் பால் உற்பத்தி திறன் பதிவு திட்டம் செயல்படுத்தப்பட்டு வருகிறது. இத்திட்டம் மேலும் 18 மாவட்ட ஒன்றியங்களுக்கு விரிவுபடுத்தப்படும் இதன் மூலம் கூட்டுறவு வரம்பில் உள்ள அனைத்து கறவை மாடுகளின் பால் உற்பத்திதிறன் தொடர்ந்து கண்காணிக்கப்பட்டு, பதிவு செய்யப்பட்டு, பால் உற்பத்தி திறன் மிக்க கறவை மாடுகள் தேர்ந்தெடுக்க வழிவகை செய்கிறது. பால் உற்பத்தி திறன் மிக்க கறவை மாடுகளுக்கு சிறந்த மரபு திறனுள்ள காளைகளின் விந்து மூலம் இனப்பெருக்கம் செய்யும் போது, மேலும் திறன் மரபியல் மிக்க புதிய கறவைகள் மற்றும் காளைகள் உற்பத்தி செய்யப்படும். இதன் மூலம் பால் உற்பத்தியினை துரித காலத்தில் பெருக்க இயலும்.

## 44. கறவை மாடுகளில் இனவிருத்தி திறன் சார்ந்த தரவுகள் ஆய்வு செய்ய "தரவு ஆய்வகம்" (Data lab) ரூ.50 இலட்சம் மதிப்பீட்டில் நிறுவப்படும்.

ஆவின் கூட்டுறவு அமைப்பின் கீழ் உள்ள கறவைமாடுகளின் பால் உற்பத்தி, இனப்பெருக்கம், நோய்தடுப்பு நடவடிக்கைகள் மற்றும் கறவைமாடுகள் காப்பீடு பற்றிய விவரங்களின் தரவுகளை ஆய்வு செய்து மேம்பாடு செய்வதற்காக ரூபாய் 50 இலட்சம் மதிப்பீட்டில் "தரவு ஆய்வகம்" (Data lab) நிறுவப்படும். இந்த ஆய்வகத்தின் முடிவுகள் கறவை மாடுகளின் மரபுத்திறன் மற்றும் இதர செயல்பாடுகளின் மேம்பாட்டிற்கு பயன்படுத்தப்படும்.

**45. பால்வளத்துறை, தமிழ்நாடு பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவு இணையம் மற்றும் மாவட்ட கூட்டுறவு பால் உற்பத்தியாளர்கள் ஒன்றியங்களின் அலுவலக பணிகள் கணினிமயமாக்கப்படும் (e-office).**

பால்வளத்துறையில் ஆணையர் அலுவலகம், மாவட்ட அளவில் துணை பதிவாளர் (பால்வளம்) அலுவலகங்கள், தமிழ்நாடு கூட்டுறவு பால் உற்பத்தியாளர்கள் இணையம் மற்றும் மாவட்ட கூட்டுறவு ஒன்றியங்கள் அனைத்தையும் கணினி மயமாக்கப்படுவதன் (e-office) மூலம் அலுவலக பணிகளின் துரிதமும் வெளிப்படை தன்மையும் உறுதி செய்யப்படும். இத்திட்டம் தமிழ்நாடு மின் ஆளுமை முகமையின் (TNeGA) மூலம் செயல்படுத்தப்படும்.

**46. பால் உற்பத்தியின் பல்வேறு கூறுகளை இளைய சமுதாயம் அறிந்துகொள்ள ஏதுவாக “மாதவரம் பால் பண்ணை பூங்கா மற்றும் அருங்காட்சியகம்" அமைக்கப்படும்.**

தமிழ்நாட்டில் பால்வளத்துறையின் துவக்கம், வளர்ச்சி மற்றும் தொழில்நுட்பங்கள் குறித்த விளக்கப் படங்கள், காட்சி பொருட்கள் உள்ளடக்கிய அருங்காட்சியகம், குழந்தைகள் மற்றும் இளைஞர்களுக்கு விழிப்புணர்வு ஏற்படுத்தும் வண்ணம் மாதவரத்தில் பால் பண்ணை பூங்கா மற்றும் அருங்காட்சியகம் அமைக்கப்படும்.

## 47. ஆவின் களப்பணியாளர்களின் மூலம் பால் உற்பத்தியாளர்களுக்கு இடுபொருள் சேவைகள் மேம்படுத்தப்படும்.

கூட்டுறவு அமைப்புகளில் முழு ஈடுபாட்டுடன் உள்ள பால் உற்பத்தியாளர்களின் தேவையை கருத்தில் கொண்டும், அவர்களின் பொருளாதார மேம்பாட்டினை உறுதி செய்யவும் மேம்பட்ட தொழில்நுட்ப விரிவாக்க சேவைகளான கால்நடை சிகிச்சை மற்றும் அவரச சிகிச்சை வசதி, இனப்பெருக்க வசதி, கலப்பு தீவன மற்றும் பசுந்தீவன உற்பத்தி, நோய் தடுப்பு வசதி, கால்நடை காப்பீடு வசதிகளை தொடர்ந்து வழங்குவது அவசியமாகும்.

இவ்விரிவாக்கப் பணிகளை மேற்கொள்ளும் பால் உற்பத்தியாளர்களுடன் நேரடித் தொடர்பில் உள்ள கிராம நல ஊழியர்கள், விரிவாக்க அலுவலகர்கள், பால்வளத்துறை முதுநிலை

ஆய்வாளர்கள் மற்றும் சார்பதிவாளர்கள் ஆகியோரை குழுவாக ஒருங்கிணைத்து பால் உற்பத்தியாளர்கள் மேற்கூறிய சேவைகளை தொய்வின்றி பெறும் வகையில் விரிவாக்க பணிகள் சீரமைத்து கண்காணிக்கப்படும்.

## 48. பசுந்தீவன உற்பத்தியை மேம்படுத்த தேசிய விதைக்கழகத்தின் (National Seeds Corporation) விநியோக உரிமம் பெறப்படும்.

தேசிய விதைக் கழகத்தின் தரமான தீவன விதைகளை ஆண்டு முழுவதும் இணையம் மற்றும் அனைத்து மாவட்ட கூட்டுறவு பால் உற்பத்தியாளர்கள் ஒன்றியங்கள் வழியாக பால் உற்பத்தியாளர்களுக்கு விற்பனை செய்வதன் மூலம் பசுந்தீவனங்கள் வருடம் முழுவதும் உற்பத்தி செய்ய முடியும். பசுந்தீவனம் தொடர்ந்து கறவை மாடுகளுக்கு வழங்குவதன் மூலம் பால் உற்பத்தி செலவு குறையும். தீவன விதைகளை விற்பனை செய்வதன் மூலம் மாவட்ட பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவு ஒன்றியங்கள் மற்றும் இணையத்திற்கு கூடுதல் வருவாய் கிடைக்க வாய்ப்பு ஏற்படும்.

**சா.மு. நாசர்**

பால்வளத்துறை அமைச்சர்